## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மைக் கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (இ.க.நி) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு அலுவல்கள் வங்கிக் கணக்கிற்கு உரிய வட்டி மற்றும் அந்நிய செலாவணி பரிவர்த்தனை வருமானம், இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் பிரகாரம் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 105,483 இனால் குறைவாக மற்றும் அந்நிய செலாவணி பரிவர்த்தனை நலன் ரூபா 94,781 இனால் கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்குரிய வட்டி ஐ.அ.டொலர் 718 ஆக இருந்ததுடன், ஐ.அ.டொலர் 59.72 மாத்திரம் இனங் காணப்பட்டிருநுதமையால் ரூபா 105,483 ஆன வட்டி வருமானமாக குறைவாக காண்பிக்கப்பட்டிருநுதது. இந்த வேறுபாட்டினை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் பிரகாரம் வெளிநாட்டு அலுவல்கள் வங்கிக் கணக்கிற்கு உரிய வட்டி கணிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் சரியாக மதிப்பிடப்படாமையால் முழுமையாக தேய்விடப்பட்ட தற்கோது | எதிர்வரும் வருடத்தில் திருத்திம் செய்து சமர்ப்பிக்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முழுமையாக தேய்விடப்பட்ட எனினும் தற்போது |

| | | |
|---|---|---|
| பயன்பாட்டில் உள்ள ரூபா 380,600 கிரயமான போட்டோ பிரதி இயந்திரத்தின் மற்றும் ரூபா 17,761,154 கிரயமான 05 வாகனங்களின் பயன்படு ஆயுட்காலம் மதிப்பீட்டில் இடம்பெற்றுள்ள வழுவினை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பயன்படுத்தப்படும் ஆதனங்களின் பயன்படு ஆயுட்காலத்தினை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 10,221,671 ஆன போதிலும், விதிவான வருமானக்கூற்றில் அந்த வருமானம் ரூபா 10,326,436 ஆக காண்பிக்கப்பட்டிருந்த மையால் வட்டி வருமானம் ரூபா 104,765 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த நிலையான வைப்புக்கள் குறுங்கால புதுப்பித்தலுக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த வருடத்தினுள் வட்டி வீதம் மாற்றமடைந்திருந்தது. இந்த வைப்புக்கள் முதிர்வடையும் போது வட்டி முழுத் தொகைக்கு சேர்கின்னமையால் கிரமாமாக கிடைக்கும் வட்டி தொகையிலும் அதிகரிப்பொன்று இடம்பெற்றுள்ளது. | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படுகின்ற மையால் கணக்கீட்டு காலப்பகுதிக்குரிய வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டிற்குரிய வருமான வரி பெறுமதியினை கணிப்பிடும் போது மூலதன படிகள் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு முறையே ரூபா 30,700 மற்றும் ரூபா 260,831 இனால் கூடுதலாக பதிவு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டிற்குரிய வரி செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய வரியின் பெறுமதி ரூபா 81,625 இனால் குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | தெளிவான பதிலொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஆண்டிற்குரிய வருமான வரிச் செலவினத்தை கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தரகுப் பணம் உள்ளடங்களாக பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,978,919 ஆக இருந்தது. அந்த மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது நிறுவனத்தின் நிர்வாக செலவினங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 20,000,000 ஆன கடன் தொகை பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது அவற்றுள் ரூபா 2,250,000 தீர்க்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | அறவிடப்பட வேண்டிய தொகைகளை துரிதமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2000-2010 காலப்பகுதிக்குரிய பெற வேண்டிய மீதிகளினை நிறுத்தி வைத்தல் வரியாக ரூபா 1,118,392 ஆன மீதி மற்றும் பெறுமதி சேர் வரி ரூபா 1,340,633 தொகை நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டவாறு உள்ளதுடன், அந்த மீதிகளை மீள அறவீடு செய்வதில் நிச்சயமற்ற நிலமை காணப்படுவதாக ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. | உரிய நிறுவனத்திற்கு அறிவித்த போதிலும், இது வரையிலும் கிடைக்கவில்லை. | இந்த மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையால் கம்பனியின் சரியான தன்மை வெளிப்படுத்தப்படுவதால், அந்த மீதி துரதமாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொரியாவில் தொழில்வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்ற ஊழியர்களிடமிருந்து செலுத்தும் வைப்புக்களாக 10 வருடங்களுக்கு முன்னர் ரூபா 50,000 படி நிறுத்தப்பட்டு வைக்கப்பட்ட ரூபா 16,215,000 ஆன தொகை மற்றும் மலேசியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 241 ஊழியர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட ரூபா 1,904,322 கூட்டுத்தொகையான கடவுச்சீட்டு கட்டணங்களுக்கு மீள செலுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோரிக்கை முன்வைக்கப்பட்டால் கொடுப்பனவுகளுக்காக இந்த மீதி முன்கொண்டு வரப்பட்டவாறு உள்ளது. | தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்ற ஊழியர்களிடமிருந்து மீளசெலுத்தும் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட இந்த பணத்தை துரிதமாக செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக வெளியேறி அங்கு மரணமடைந்த இலங்கையர்களுக்காக 2013 - 2018 காலப்பகுதியினுள் முகவராண்மைக்கு கிடைத்த ரூபா 8,273,415 கூட்டுத்தொகையான மரண நட்டஈட்டுக்குரிய தரப்பினர்க்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தினால் தங்கி வாழ்வோர் குறித்துரைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு தாமதமாகுதல். | வெளிநாட்டில் மரணமடைந்த ஊழியர்களுக்காக கிடைத்துள்ள இந்த நட்டஈட்டுத் தொகை உரிய தங்கி வாழ்வோரை இனங்கண்டு அவர்களுக்கு வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 6,648,781 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,469,369 ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 4,179,412 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கம்பனியின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 7,787,156 இனால் குறைவடைந்த போதிலும், ஏனைய நிர்வாக செலவினங்கள் ரூபா 10,322,336 இனால் மற்றும் மருத்து நிலைய செலவினம் ரூபா 1,892,000 இனால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கம்பனியின் ஒட்டுமொத்த வருமானத்தில் 28 சதவீதம் நிலையான வைப்பு முதலீடுகள் மூலம் உழைக்கப்பட்ட வட்டியாக இருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளில் உழைக்கப்பட்ட வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 7.46 மில்லியனால் குறைவடைந்திருந்தது. முன்னைய வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் வெளிநாட்டு பிரயாண செலவினம், சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மற்றும் நட்டஈடு செலுத்துதல் முறையே ரூபா 2,525,250 தொகை, ரூபா 3,625,911 தொகை மற்றும் ரூபா 2,250,103 இனால் குறைவடைந்திருந்ததுடன் செயற்பாட்டு வருமானமான ரூபா 24,460,137 இனால் 72 சதவீதத்தில் அதாவது ரூபா 17,536,936 தொகை ஊழிய கிரயத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில் வாய்ப்புக்காக கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு செல்லும் தொழிலாளர்களுக்கு மருத்து அறிக்கைகளை வழங்கும் நோக்கில் தனியார் நிறுவனமொன்றுடன் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ நிலையம் தொடர்பான பணிகள் முறையற்ற விதத்தில் இடம்பெற்றமை காரணத்தினால் பின்வரும் குறைபாடுகள் கம்பனிக்கு நேர்ந்திருந்தது. | இன்சிலப் மருத்துவ நிலையத்தின் அத்துமீறி தங்கியிருந்த அதன் பணிப்பாளரின் காரணமாக குத்தகை உடன்படிக்கையின் (f) பிரிவின் பிரகாரம் செயற்பட முடியாதுள்ளது. அந்த கட்டிடத்தினை விடுவித்து உரிய உரித்தினை | வியாபார பணிகளை நிறுத்தியுள்ள போது உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடத்தினை கையளிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்காமையினால் உரிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (i) | உரிய கணக்கின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியினால் உரிய தனியார் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னர் வியாபார நிலையத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். எனினும், அந்த மருத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்ட மருந்து அறிக்கைகள் வெளிநாடுகளினால் நிராகரிக்கப்பட்டமையால் வியாபார நடவடிக்கையை நிறுத்துமாறு 2016 செப்தெம்பர் 26 ஆந் திகதி அந்த தனியார் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2019 யூலை மாதம் வரையிலும் வியாபார பணிகளை நிறுத்தி அந்தக் கட்டிடத்திலிருந்து நீங்கியிருக்கவில்லை. | உரிமையாளருக்கு கையளிப்பதற்காக உரிய நடடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ii) | மேற்படி மருத்துவ நிலையம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்தின் உரிமையாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை தனியார் கம்பனி ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையில் (f) பிரிவின் பிரகாரம், வாடகை உடன்படிக்கை முடிவுறுத்துவதற்கு குத்தகையாளருக்கு தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் 3 மாதங்களுக்கு முன்னர் எழுத்துமூலம் அறிவித்து அல்லது 3 மாத வாடகை முற்பண தொகையினை செலுத்தி முன் அங்கீகாரத்தின் பின்னர் உடன்படிக்கையை நிறைவு செய்ய வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயற்படாது வாடகை உடன்படிக்கையை நிறைவு செய்ய வேண்டியாக இருந்த 2016 செப்தெம்பர் முதல் 2017 செப்தெம்பர் வரை ரூபா 2,640,000 கூட்டுத்தொகையானது கட்டிட வாடகையாக விலைவற்ற செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கட்டிடத்தின் உரிமையாளரின் கோரிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அந்த பணத்தை 12 தவணைகளில் செலுத்தியுள்ளது. 2017.09.17 திகதியின் பின்னர் எந்தவொரு பணமும் செலுத்தப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கணக்காய்வுத் திகதியான 2019 யூலை 05 ஆந் திகதி வரையிலும் வாடகை உடன்படிக்கை நிறைவடைந்து 01 வருடம் மற்றும் 9 மாத காலம் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 600,000 தொகையான முற்பணத் தொகை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலப்பகுதியினுள் கட்டிடத்தினை மீள கையளிக்க முடியாத காரணத்தால் முற்பணத் தொகையினை மீள அறவிட முடியாதிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட வாடகைத் தொகை மற்றும் முற்பணத் தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புலம்பெயர்ந்த நபர்களுக்காக சலுகை காப்பீட்டு நிதியத்திற்கு உரியதாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் கம்பனி ஆகியவற்றிற்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் காப்பீட்டு மேவுகை காலம் 02 வருடங்கள் மற்றும் 01 மாதங்கள் ஆன போதிலும், பணியகம் மற்றும் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் காப்பீட்டுக் காலம் 2 வருடங்கள் மற்றும் 3 மாதங்களாக இருந்தது. அந்த சலுகை காலத்தினுள் காப்பீட்டாளர்களுக்கு ஏற்பட்ட நட்ட மீளளிப்பு பொறுப்பு கம்பனிக்கு மேற்கொள்ள நேர்ந்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,600,000 தொகை உள்ளடங்கலாக 03 வருட காலப்பகுதியினுள் ரூபா 7,024,940 ஆன மேலதிக நட்டஈட்டுத் தொகையினை செலுத்த நேர்ந்திருந்தது. | இந்த காப்பீட்டு முறைமைக்கு உரியதாக கையொப்பமிட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் நட்டஈட்டுத் தொகையினை செலுத்தும் பொறுப்பு கம்பனியிடம் உள்ளமையினால் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | இந்த உடன்படிக்கையினை கைச்சாத்திடும் போது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் மற்றும் அதன் மூலம் கம்பனிக்கு ஏற்படும் நிதி ரீதியான நட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே இந்த காப்பீட்டு முறைமை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு கையளிக்கும் சந்தர்ப்பத்தில் அதுவரையிலும் காப்புறுதி செய்துள்ள அங்கத்தவர்களுக்கு நட்டஈடு செலுத்தும் விதம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு மேற்படி விடயங்கள் தொடர்பில் ஏற்படாமை பிரச்சினையொன்றாகும்.<br><br>மேற்படி விடயம் தொடர்பில் கவனம் செலுத்தாது கம்பனிக்கு ஏற்பட்டுள்ள நிதி ரீதியான நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு நட்டத்தினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் புறவிதியின் பிரகாரம் கம்பனிக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை நிறுவனமொன்றாக மற்றும் வெளிநாடு செல்லும் ஊழியர்களை பயிற்றுவித்தல் உள்ளடங்கலாக துறைகளுக்குரிய விரிவான வீச்சில் செயற்படும் இயலுமை கிடைத்திருந்த போதிலும், கடந்த சில வருடங்களினுள் அதன் வியாபார பணிகள் கிரமமாக சிதைவடைந்து மீளாய்வாண்டிடளவில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக ஊழியர்களை அனுப்புதல் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அந்த வியாபார பணியின் கருத்திற்கொள்ளக் கூடிய செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்படாமையால் கம்பனி நிதி ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் நெருக்கடிக்குள்ளான நிலையை அடைந்திருந்தது. | வியாபார பணிகளை பரவலாக்கி கம்பனி இலாபமீட்டும் நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கம்பனி உள்ளாகியுள்ள நிதி மற்றும் நிர்வாக நெருக்கடி நிலைமைக்கு துரிதமான தீர்வினை வழங்குதல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் கம்பனியின் பணிப்பாளர் சபை கூடியிருந்த போதிலும், கடந்த வருடங்களில் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட விதத்தில் கம்பனி நிதி மற்றும் நிர்வாகப் பணிகள் வீழ்ச்சியடைந்தவாறு காணப்பட்டமை தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் உரிய முறையில் கிடைத்திருக்கவில்லை என்பது அந்த கூட்ட அறிக்கைகளை ஆராயும் போது அவதானிக்கப்பட்டது. | வியாபார பணிகளை விரிவுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | வருடாந்த கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி வியாபாரத்தின் முன்னோக்கிய நிலவுகைக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நேரடியான தொடர்புகளின் அடிப்படையில் தேடிக்கண்டறியப்பட்ட வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவ கட்டணங்களை அறவிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையொன்று இல்லாதிருந்ததுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அளவுகளிலிலான கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 03 தொழில் கட்டளைகளுக்கு உரிய ரூபா 25,000 தொகை, ரூபா 29,113 தொகை மற்றும் ரூபா 33,261 தொகை அறவிடப்பட்டமை உதாரணமாக காண்பிக்க முடியும். | நடைமுறை நிலைமையை கருத்திற் கொண்டு கட்டணம் தீர்மானிக்கப் பட்டுள்ளது. | கட்டணத்தினை அறவிடுவதற்காக பொருத்தமான நடைமுறையொன்றினை தயாரித்து உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த 02 வருட காலப்பகுதியினுள் கம்பனிக்கு கிடைத்துள்ள தொழில் கட்டளைகளின் எண்ணிக்கை 17 முதல் 08 வரையிலும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை 1235 - 839 வரையிலும் கிரமமாக குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டினுள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக உரிய முறையில் வெளிநாடு சென்ற மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 211,459 ஆக இருந்ததுடன் அவற்றுள் கம்பனியினால் கண்டறியப்பட்ட தொழில்களுக்காக புலம்பெயர்ந்த எண்ணிக்கை 424 ஆகும். அது ஒட்டுமொத்த | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் வியாபாரத்தின் முன்னேற்றத்திற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் பட்டவாறு உள்ளது. | கம்பனிக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கும் கிடைக்கும் தொழில் வாய்ப்புக்களுக்காக பொருத்தமான ஊழியர்களை ஈடுபடுத்துவதற்கும் செயற்திறனான வேலைத் திட்டமொன்றினை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. |

புலம்பெயர்ந்தோரின் 0.20 சதவீதமாகும் ஆகும். அவ்வாறே மீளாய்வாண்டின் போது கம்பனியினால் கண்டறியப்பட்ட 760 சந்தர்ப்பங்களுக்கு ஊழியர்கள் அனுப்புவதற்கு முடியாதிருந்தது. கடந்த வருடங்களில் கம்பனிக்கு வழங்கிய தொழில் கட்டளைகளுக்காக ஊழியர்களை ஈடுபடுத்தாமையினால் 2018 ஆம் ஆண்டில் கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளிலிருந்து தொழில் கட்டளைகள் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) இஸ்ரேல் அரசுடன் விவசாய துறையில் வேலைவாய்ப்புக்களில் ஈடுபடுத்தல் தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இஸ்ரேல் நாட்டிற்கு செல்லும் ஊழியர்களிடமிருந்து தொழில் வாய்ப்பு அனுமதிப்பத்திர காலம், எல்லை நிறைவடையும் போது தமது நாட்டிற்கு மீள வரவழைக்கும் பொறுப்பு கம்பனி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இரண்டு வருடங்களினுள் சட்டவிரோதமான முறையில் இஸ்ரேல் நாட்டினுள் தங்கியிருந்த 105 ஊழியர்கள் மீள தமது நாட்டிற்கு வரவழைப்பதற்கு அல்லது அவர்களின் பிணையாளர்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனி தவறியிருந்தது.

எனினும், ரூபா 2,500,000 ஆன பிணை பெற்றுக் கொள்ளப்பட்டு இஸ்ரேலில் தொழிலுக்கு சென்ற தமது தொழில் கால எல்லை நிறைவடைந்து தமது நாட்டிற்கு வருகை தந்து புலம்பெயர்ந்தவர்களின்

அனுமதிப்பத்திர காலஎல்லையினுள் சட்டத்திற்கு முரணான வகையில் அந்த நாட்டில் தங்கியுள்ள ஊழியர்கள் மீள வரவழைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வாறு உள்ளது.

தொழில் வாய்ப்புக்களுக்காக வெளிநாடு செல்லும் மீள வருகை தராத ஊழியர்கள் அல்லது அவர்களுக்காக பிணைகளில் கையொப்பமிட்ட நபர்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த தொழில் காலஎல்லை பூர்த்தி செய்து சட்டரீதியாக தமது நாட்டிற்கு வருகை தந்த ஊழியர்கள் மீள வெளிநாடுகளுக்கு அனுப்பும் போது இவ்வாறு பணத்தினை பிணையாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மேற்படி பிரச்சினைக்கு தீர்வொன்றா என்பது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி பிணைக்கு மேலதிகமாக ரூபா 100,000 ஆன தொகையினை பிணையாக பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படும் பொது முகாமையாளர் பதவிக்காக கம்பனியின் அல்லது பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாது பணியகத்தின் தலைவரால் 10 சந்தர்ப்பங்களில் பணியக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.<br><br>2019 மார்ச் 15 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் இந்த நிறுவனத்திற்காக நிரந்தர அடிப்படையில் பொது முகாமையாளர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2019 யூன் 03 ஆந் திகதி வரையிலும் பணியகத்தின் உத்தியோகத்தரொருவர் பதில் கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | கம்பனி இதுவரையிலும் நிதி ரீதியில் நலிவான நிலையில் காணப்படுகின்றமையால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பதவியணியை பதிற்கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தல் இலாபமானது என்பது தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் போது வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தி நிரந்தர அடிப்படையில் பொது முகாமையாளர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கும் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அவ்வாறே அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக வியாபார அபிவிருத்தி மதியுரையாளராக உத்தியோகத்தரொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட காலத்திற்கு உரியதாக எவ்வித பணியும் கையளிக்கப்படாது சம்பளமாக ரூபா 143,925 தொகை செலவிடப்பட்டிருந்தது. | | |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றின் பிரகாரம் வியாபாரத்தின் முன்னேற்றத்திற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | போட்டி அடிப்படையிலான வியாபார பணியில் ஈடுபடும் இந்த கம்பனிக்காக நிலவும் நலிவுகள், வியாபார தேவைப்பாடுகளைப் போன்றே வியாபார அச்சுறுத்தல்களும் தொடர்பில் கவனம் செலுத்தி கம்பனியின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்ற இயலும் வகையில் தூரநோக்குடன் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான கம்பனியால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 07 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரிய பணிகள் ஆண்டினுள் திட்டமிட்டவாறு நிறைவேற்ற முடியாதிருந்தது. | இந்த வருடத்தின் நடைமுறைப்படுத்த முடியாத நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கி எதிர்வரும் திட்டங்கள் | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நடைமுறை சாத்தியமானதாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் காலஅடிப்படையில் மீளாய்வு செய்து உரிய திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களினை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |